யோகாஸன ஆலய விஜயம்

மலர் 32 | காளயுக்தி ஆண்டு மாசித் திங்கள் February—1979 | இதழ் 2

எழுத்தொடு பாடலும் எண்ணெண் கலையும்
பழித்தலைப் பாசப் பிறவியும் நீங்கா
வழித்தலைச் சோமனோ டங்கி யருக்கன்
வழித்தலைச் செய்யும் வகையுணர்ந் தேனே.

இலக்கண இலக்கியங்களும், இவற்றின் விரிவான அறுபத்து நான்கு கலைகளும் பழித்தற்கு இடமாகிய சுட்டுணர்வாகும். அச் சுட்டுணர்வாகிய பாசத்தினால் தொடரும் பிறவியும், நீங்காத முறைமை வாய்ந்த இடப்பால் நரம்பாகிய திங்களும், வலப்பால் நரம்பாகிய ஞாயிறும், நடுப்பால் நரம்பாகிய தீயும் அருளினால் அமையும் நிலைகளை யுணர்ந்து அவ்வுணர்வால் முதன்மையான செந்நெறிச்செல்லும் மேன்மை யுணர்ந்தேன்.

—திருமூலர்.

சந்தா விபரம்	உள்நாடு	சிலோன்	வெளிநாடு (கப்பல்)	விமானம்
ஆண்டு சந்தா	ரூ. 5—00	ரூ. 15—00	ரூ. 15—00	ரூ. 30—00
ஆயுள் சந்தா	ரூ. 50—00	ரூ. 150—00	ரூ. 150—00	ரூ. 300—00
தனிப்பிரதி	50 காசு	1—25 காசு	ரூ. 1—25	ரூ. 2—00

பொன் மொழிகள்

சமூகச் சீர்திருத்தத்தைப்பற்றிப் பேசுகிறீரா? கடவுளைக் கண்ட பிறகு நீர் அதனைச் செய்யலாம். பழைய காலத்து ரிஷிகள் கடவுளைக்காண உலகத்தைத் துறந்தனர் என்பதை மறக்கவேண்டாம். இதுதான் அவசியம் வேண்டப்படுவது. நீர் விரும்பினால் அவைகள் எல்லாம் உள்மைவந்து அடையும், ஆகவே முதலில் கடவுளைக் காண்பீர்! பிறகு சமூகச் சீர் திருத்தம் பிரசங்கங்கள் இவைகளைப்பற்றிப் பேசிக் கொள்ள லாம். —ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர்.

என் கனவுகள் வெறும் ஆகாயக் கோட்டைகளன்று கூடிய வரையில் அவற்றை நனவாக்கவே நான் விரும்புகிறேன்

மகாத்மா காந்தியடிகள்.

உயர்திரு கோ மு. சுவாமி அவர்கள் பொன்மொழி

நம் சரீரத்தில் சதா காலமும் தீப ஒளி பிரகாசித்துக் கொண்டிருக்கிறது மக்களாகிய நாம் அவ்வொளியை அடை வதற்காக ஆலயங்களிலும், இல்லங்களிலும் தீபத்தை ஏற்று கின்றோம். தீபம் இல்லாமல் எக்காரியமும் நாம் செய்வதில்லை.

திருமதி சாவித்திரி செல்வராஜன்.

பௌர்ணமி வகுப்பு

13—3—79 (காளயுக்தி௵ மாசிமீ 29உ) செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்குக் கீழ்க்காணும் இடங்களில் வகுப்பு நடைபெறும்.

1. அருள்மிகு மன்னார்சாமி கோவில், மன்னார்சாமி கோவில் தெரு, இராயபுரம், சென்னை-600 013.
2. சுந்தர விநாயகர் கோவில், சின்ன நத்தம், செங்கல்பட்டு
3. திரு தேவராஜ் இல்லம், 17, வள்ளுவன் தெரு, புரசை, சென்னை-84

வேதாந்த விரிவுரை!

பிரதி புதன்கிழமை இரவு 7 முதல் 8 மணி வரை சென்னை இலிங்கிசெட்டி தெருவிலுள்ள எண் 121/122 அருள்மிகு செல்வ விநாயகர் கோவிலில். யோகாசன ஆலய நிறுவனரும் தலைவருமாகிய உயர்திரு கோ. மு சுவாமி அவர்கள் மகரிஷி தாயுமானவர் திருப்பாடல் களுக்கும், கைவல்ய நவநீதத்திற்கும் வேதாந்த விரி வுரையாற்றி வருகின்றார்கள். அன்பர்கள் யாவரும் கலந்துகொண்டு நல்வாய்ப்பினில் பங்கு கொள்க!

மகரிஷி தாயுமானவர்

ஆசையெனும்
திரு. கோ. மு. சுவாமி அவர்கள்
நிகழ்த்திய உரை விளக்கம்.

தந்தை தாயுநீ; என்னுயிர்த் துணையுநீ;
சஞ்சல மதுதீர்க்க
வந்த தேசிக வடிவுநீ; உனையலான்
மற்றொரு துணைகாணேன்;
அந்த மாதியு மளப்பருஞ் சோதியே!
ஆதியே! அடியார்தம்
சிந்தை மேவிய தாயுமா னவனெனுஞ்
சிரகிரிப் பெருமானே!

பதவுரை

(இன்) அந்தம் (உம்) முடிவும், ஆதியும்-முதலும், அளப்பு அரு-அளத்தற் கரிதாயுள்ள, சோதியே!-சுடர்ப் பிழம்பே!, ஆதியே!-முதல்வனே!, அடியார்-அன்பர்கள், சிந்தை-மனத்தில், மேவிய-பொருந்திய, தாயுமானவன் எனும்-தாயுமானவன் என்று சொல்லப் படுகிற, சிரகிரி பெருமானே!-திரிசிரமலையில் எழுந்தருளியுள்ள சிவபெருமானே! தந்தை(உம்) தகப்பனும், தாயும்-அன்னையும், நீ-நீயே, என்-அடியேனுடைய, உயிர்துணையும்-உயிர்த்துணைவனும், நீ-நீயே, சஞ்சலம்-மனத்துயரம், தீர்க்க-நீக்குவதற்காக, வந்த-எழுந்தருளிவந்த, தேசிக வடிவும்-குரு மூர்த்தமும்; நீ-நீயே; உனை-தேவரீரை அல்லால்-அல்லாமல், மற்றொரு-வேறொரு, துணைகாணேன்-துணையைக் கண்டிலன், என்க,

கருத்துரை

முடிவும் முதலும் அளத்தற்கு அரிதாயுள்ள சுடர்ப் பிழம்பே! முதல்வனே! அன்பர்கள் உள்ளத்தில் பொருந்தியுள்ள தாயும் ஆனவன் என்று சொல்லப்படுகின்ற திருச்சிராப்பள்ளி மலைமீது

எழுந்தருளியுள்ள சிவபெருமானே! தந்தையும் தாயும் நீயே அடியேனுடைய உயிர்க்குத் துணைவனும் நீயே! மனத்துயரம் நீக்குதற்காக எழுந்தருளி வந்த குருவடிவானவரும் நீயே! தேவரீரை அல்லாமல் வேறோரு துணையைக் கண்டிலேன் என்க.

விரிவுரை

அருளாளர் அல்லது சான்றோர் அனைவருமே அம்மையே அப்பா என்றே பரம் பொருளை அழைக்கின்றனர் குழந்தையும் முதலில் அம்மா என்றே அழைக்கின்றது. மக்களும் துன்பக் காலத்தில் அம்மா! என்றே தங்கள் வேதனையை வெளிப் படுத்து கின்றனர். அம்மா! எனப்படுபவராகிய தாய் தன் குழந்தைக்குத் தந்தையை அறிமுகப் படுத்துகிறாள். தந்தை ஆசிரியரிடத்தில் சேர்ப்பிக்கிறார். ஆசிரியர் அளப்பரும் பொருளாகிய ஆண்டவனைக் காண்பிக்கின்றார்! இதனை மாதா, பிதா, குரு. தெய்வம் என்ற முது மொழியால் அறிகின்றோம். இங்ஙனம் உலகமே தாயை முன்னழைக்கத் தாயுமான அடிகளார் "தந்தை தாயும் நீ" என்று கூறி புரட்சியை உண்டு பண்ணி யிருக்கக் காரணமும் உண்டு!

அலைமகள் (லட்சுமி)-இச்சாசக்தி, மலைமகள்-(பார்வதி) கிரியாசக்தி கலைமகள் (சரஸ்வதி)-ஞானசக்தி மற்றும் மாயா, மாமாயா, ராஜ ராஜேஸ்வரி, சாமுண்டீஸ்வரி அகிலாண்டேஸ்வரி, பெரியநாயகி என்றெல்லாம் பலவாறு அழைக்கப் படுகின்ற அனைத்துச் சக்திகளும், பராசக்தி, சிவசக்தியில் ஒடுக்கமுற்று இறுதியாக சிவத்தில் ஒடுங்குகின்றன. சிவத்தை ஆணாகவும், சக்தியைப் பெண்ணாகவும் உருவகம் செய்தனர். இரண்டையும் சரிபாதித் திருமேனியாக இணைத்து அர்த்தநாரீசுவரர் [(உமை பங்காளன்) என்ற திருப் பெயரையும். சூட்டினர்.

சிவம் என்பது மங்கள முடையது. நீக்க மற நிறைந்தது என்பதாகும். இத்தகைய பொருளாகக் கண்ட பொருள் எவைக்கும் முதற் பொருளாகிப் போதமாக (அறிவுக்கு அறிவாக) விளங்கும் பரம் பொருளைத் "தந்தை தாயு நீ" என்று அடிகளார் விவரித்தது சாலப் பொருத்தமேயாகும். சிவசக்தியாகிய ஆதி சக்தியின் பிள்ளைகள் ஐவர் பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன் என்பர். திருமந்திரம் இதனை

ஓங்காரி என்பாள் அவளொரு பெண்பிள்ளை
நீங்காத பச்சை நிறத்தை யுடையவள்
ஆங்காரி யாகியே ஐவரைப் பெற்றிட்டு
ரீங்காரத் துள்ளே இனிதிருந் தாளே.

எனப் பகர்கின்றது பிரமன் முதலான ஐவரையும், தாயாகிய சக்தியையும் கடந்ததாகிய மூலப் பொருளாம் பிரம்மம் எனப்படும் சிவத்தையே கடவுளாகக் கொண்டுள்ள இந்து தருமத்தின் மாண்புதான் என்னே! இந்து தருமத்தில் கூறப்படுகின்ற கடவுள் தத்துவம் தெளிவாகவும், விஞ்ஞான ரீதியான அணு ஆராய்ச்சிக்கு உடன் பாடானதாகவும், அணு ஆராய்ச்சியையும் கடந்ததாகவும் உள்ளது. நூலறிவோடு அனுபவ (சாதனை) அறிவினால் விளக்கம் பெற்ற ஞானியர்

இதனை உள்ளங்கை நெல்லிக்கனியென விளக்கியுள்ளனர். அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்றது ஆப்தர் மொழியன்றோ?

தந்தை சிவமும் தாய் சக்தியும் என்பதை ஒருவாறு உணர்ந்து கொண்டோம் நாம் சக்தியை இழந்ததும் சத்தும் பிரிந்து விடுகின்றது. சத்துப் போனதும் செத்துப் போனார் என்கிறோம். சக்தியை இழக்காமல் சத்தைச் சேகரிப்பதே மானிடருக்குள்ள அளப்பரும் ஆற்றலாகும் இதை அறிந்து கொள்ள உற்ற துணை ஆன்மீக நெறியேயாகும். சக்தியை இழப்பதென்பது சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், எனப்படும் ஐம்புலன் வழிச் செல்வதாகும். இவ்வைம்புலன்களுக்கும். அடிப்படையானது மனம். எனவே மனதைச் சிதறவிடாமல் ஒருமுகப் படுத்தும் பயிற்சியை அளிக்கிறது ஆன்மீக நெறி. மனம் ஒருமுகப் பட்டதும் எழும் சத்தியின் திரட்சியாகிய குண்டலினியை சிவத்தோடு கலத்தலாகிய முயற்சி யோகம் எனப்படும். இதனை யறியாத சீவர்கள் வாடகை வீடு போன்ற உடலைச் சொந்த வீடாக நம்பி வாழ்ந்து வருவதும் திருவருளின் விளையாட்டோ?

எண்ணரியப் பிறவிதனில் மானிடப் பிறவிதான் யாதினும் அரிது அரிது என்று உணர்ந்த தாயுமான அடிகளார், ஐயகோ! இப்பிறவி நல்ல பிறவியாயிற்றே! அறிய வேண்டிய, அறியக் கூடிய அனைத்தையும் இப்பிறவியில் அறிந்து கொள்ள முடியுமே! நாள்களை வீணாகக் கழித்து விட்டால் தேகம் என்னை விட்டு நீங்கி விடுமே! (சீவனாகிய) நானும் தேகத்தை விட்டு விடுவேனே! பின்னை யாங்ஙனம் உய்வு பெறுவேன்? என வருந்துவதை

"ஏகமான உருவான நீ.............................
அநந்த முண்டுநல சனனமீ திதனுள்
அறிய வேண்டுவன அறியலாம்
மோக மாதிதரு பாசமானதை
அறிந்து விட்டுனையும் எணுயுமே
முழுது ணர்ந்துபர மான இன்பவௌம்
மூழ்க வேண்டும் இதுஇன் றியே
தேக மோநழுவி நானுமோ நழுவின்
பின்னை உய்யும்வகை உள்ளதோ
தெரிவ தற்கரிய பிரமமே அமல
சிற்சு கோதய விலாசமே

என்ற பாடல் உணர்த்துகின்றது.

உலகிலேயே கருணைமிக்கவள் தாய்! எனவே தாய்க்கு ஒப்ப இறைவனை பாவித்தனர் சான்றோர். பயனற்றத் தன்மகனைத் தந்தை அடித்தால் தாய் கருணையோடு அணைத்துக் கொள்வாள்; தாயடித்த போது தந்தை தடுத்து ஆட்கொள்வான்; தந்தையும் தாயுமாக விளங்கும் அம்பலத்தாடும் பெருமானே! வினையெனும் சாட்டையால் நீ என்னை அடித்தது போதும் ஐயா! என்னை அணைத்திடல் வேண்டும் அம்மையப்பா! என்று விண்ணப்பித்த அருட்பிரகாச வள்ளலார், தந்தை தாய் மட்டுமன்று! குரு, சுவாமி, பூமி, பொருள், வாழ்வு, நட்பு, துணை, சுற்றம் யாவும் நீயே! நீயிருக்க நான் இவ்வுலகில் கிடந்து கலங்குவது நின் திருவருட்கழகோ? எனவும் கேட்கின்றார், இதோ அப் பாடல்;

தந்தையுந் தாயுங் குருவும் யான் போற்றுஞ்
சாமியும் பூமியும் பொருளும்
சொந்தநல் வாழ்வும் நேயமுந் துணையும்
சுற்றமும் முற்றுநீ என்றே
சிந்தையுற் றிங்கே இருக்கின்றேன் இதுநின்
திருவுளந் தெரிந்ததே எந்தாய்
நிந்தைசெய் யுலகில் யானுளங் கலங்கல்
நீதியோ நின்னருட்(கு) அழகோ?

இறைவனை அம்மையப்பராகக் கொண்ட தாயுமான அடிகளாரும் "பொய்யினேன் புலையினேன்" என்ற பாடலில், உலகிலுள்ள அற்பத் தனமையான குணங்கள் அத்துணையும் பொருந்தியுள்ள அடியவனாகிய என்னை, வினையினேன் என்று விட்டுவிடுவாயெனில் தடுமாறுவதைத் தவிர எனக்கு வேறு துணை ஏது? என்று கூறி, "ஐயனே! அப்பனே எனும் அறிஞர் அறிவைவிட்டு அகலாத கருணை வடிவே" என்கின்றார்.

அறிவை அறிந்தவரே அறிஞர். அவ்வறிவைப் பெறுவதென்பது நூல்களைக் கற்பது என்பது பொருளன்று! மௌன சாதனை மூலமாகவே பெறுவதாகும்.

கற்றஅறிவால் உனைநான் கண்டவன்போல் கூத்தாடிற்
குற்றமென்றென் நெஞ்சே கொதிக்கும் பராபரமே

என்றார் அடிகளார். நூற் கல்வி நிரம்பிய விவேகானந்தர், கல்லாத அறிவு பெற்ற இராமகிருஷ்ணரிடம் தஞ்சம் புகுந்து பெற்றதே உண்மை அறிவாகும்! அவர்களை அறிஞர் எனவும் ஞானிகள் எனவும் போற்று கின்றோம, அறிவு ஒன்றே எனினும் பொய்யறிவு, மெய்யறிவு என இருவகைப்படுத்துகின்றோம். பொய்யறிவு அல்லது பொய்யுணர்வு எனபது, புழுக்கூடாகிய உடலை நான் என நினைந்திருப்பது; மெய் யறிவு அல்லது மெய்யுணர்வு என்பது அம்மையப்பராகிய பரம் பொருளை உணர்வதாகும்.

பொய்யுணர்வாய் இந்தப் புழுக்கூட்டைக் காத்திருந்தேன்
உய்யும் வகையும் உளதோ பராபரமே

என்று கூறிய அடிகளார், அன்னையே! அன்னையே! என்பாராம். சில சமயம் அப்பா! அப்பா! என்பாராம். பேய்போல அலறி மூர்ச்சையாகி மீண்டும் பிதற்றுவாராம். எல்லா கூற்றுகளுக்கும் அப்பாலாகி ஆடல் புரியும பெருமானே! உன்னுடைய பெருமையை என்னால் கூறவிய லுமோ? என்கின்றார். "அன்னேயனே எனும் சிலசமயம்" என்ற பாடலில். அன்னையும் பிதாவும் இறைவன் எனில் சீவர்கள் சேயன்றோ? என்ற வினாவைத் தொடுத்த அடிகளார்,

தூய தான துரிய அறிவெனும்
தாயும்நீ இன்பத் தந்தையும் நீஎன்றால்
சேயதாம் இந்தச் சீவத் திரளன்றோ
ஆயும் பேரொளி யான அகண்டமே

என்கின்றார். சாதகர், அறிவால் அறியப்படும் பொருளே தாயும் தந் தையுமாகும் என்பதைத் தெளிந்துணர்தல் வேண்டும்! "அறிவால் அறிந்துன் இருதாள் இறைஞ்சும்" என்று திருவாய் மலர்ந்த அருண

கிரிநாதர் தணிகைப் பெருமானைப் பாடுமுகத்தான் கூறுவதாவது, ஐயா! எனைக் காக்கும் தாயும் தந்தையுமாக நீயிருக்க அறிவற்ற குழந்தையாகிய யான் யாரைத் துணையெனக் கொள்வேன்? என்ற கருத்துச் செறிந்த திருப்புகழால் உருக்கமாகப் பாடுகின்றார்.

ஏது புத்திஐ யாஎ னக்கினி
யாரை நத்திடு வேன வத்தினி
லேயி றத்தல்கொ லோஎ னக்குநி தந்தைதாயென்
றேயி ருக்கவு நானு மிப்படி
யேத வித்திட வோச கத்தவ
ரேச லிற்பட வோந கைத்தவர் கண்கள்காணப்:
பாதம் வைத்திடை யாத ரித்தெனை
தாளில் வைக்கநி யேம றுத்திடில்
பார்ந கைக்குமை யாத கப்பன்முன் மைந்தனோடிப்
பால்மொ ழிக்குர லோல மிட்டிடில்
யாரெ டுப்பதெ னுவெ றுத்தழ
பார்வி டுப்பர்க ளோஎ னக்கிது சிந்தியாதோ;
ஓத முற்றெழு பால்கொ தித்தது
போல எட்டிகை நீச முட்டரை
போட வெட்டிய பாநு சத்திகை யெங்கள்கோவே
ஓத மொய்ச்சடை யாட வுற்றமர்
மான்ம ழுக்கர மாட பொற்கழ
லோசை பெற்றிட வேந டித்தவர் தந்தவாழ்வே;
மாதி னைப்புன மீதி ருக்குமை
வாள்வி ழிக்குற மாதி னைத்திரு
மார்ப ணைத்தம யூர அற்புத கந்தவேளே
மாரன் வெற்றிகொள் பூமு டிக்குழ
லார்வி யப்புற நீடு மெய்த்தவர்
வாழ்தி ருத்தணி மாம லைப்பதி தம்பிரானே

தாயும் தந்தையுமாக விளங்கும் பரம்பொருளோடு நம்மைச் சேர்ப்பது குருநாதன் கொடுக்கும் ஒப்பற்ற ஒரு சொல்லேயாம். இதனை ' ஐய! நீ சொன்ன ஒரு வார்த்தையினை மலையிலக்கென நம்பினேன்'' என்ற தாயுமானவரின் திருவாய் மொழியில் தெளிகின்றோம். அச் சொல்லின்மீது நம்பிக்கைக் கொள்ள வேண்டும். சொல்லைக் கொடுத்த குருவருளை நினைந்து ''படிமிசை மௌனியாகி நீ ஆளப் பாக்கியம் என் செய்தன் பரனே என்கிறார் சுவாமிகள். எனவே அடிகளார் இப் பாடலில் ''தந்தை தாயும்நீ என்னுயிர்த் துணையுநீ சஞ்சலமது தீர்க்க வந்த தேசிக வடிவுநீ'' என அனைத்தும் நீயே என்றனர்.

உண்மையாகவே முழுமனதுடன் ஏற்றுக்கொண்டுள்ளோமா? என நம்மை நாமே சோதித்துப் பார்க்க வேண்டின் ஒரு உபாயம் உளது! விழிப்பு நிலையில் மட்டுமன்றி உறக்கத்திலும் குருமொழியை உணர்கின்றோமா? என ஆராய்தல் வேண்டும். அங்ஙனம் கனவு நிலையிலும் ஜபிக்கின்றோம் எனில்! நம்முடைய முழு நம்பிக்கையை உணர்ந்து கொள்ளலாம். அதனையும் ஒன்றனை எதிர்நோக்கி காமியத்

துடன் செயல்படுகின்றேமா? பயன் கருதாத நிஷ்காமியத்துடன் நினைக்கின்றேமா என்பது வேறு உண்டு! மனேநிலையில் செயல்படுவது காமியம்; அறிவு நிலையில் செயல்படுவது நிஷ்காமியமாகும். பெரும்பாலோர் ஏதோ ஒரு பயனை எதிர்நோக்கியே செயல்படுகின்றனர். அத்தகைய கதையைக் காண்போம்.

கமலக்கண்ணன், விசாலம் என்ற தம்பதியர் எலியும் பூனையுமாகவே வாழ்க்கை நடாத்தி வந்தனர். பிள்ளைப்பேறு இல்லாத இவர்கள் வாழ்க்கையில் எந்நேரமும் சச்சரவே மலிந்தது. கமலக்கண்ணன் வாயில்லா பூச்சி! உரக்கப் பேசமாட்டார். அமைதியாக இருப்பார். இவர் தம் நேரத்தையெல்லாம் கோவிலுக்குச் செல்வதிலும் புராண பிரசங்கங்களைக் கேட்பதுமாகக் கழித்தார். இரவு சற்று நேரங் கழித்து வந்தால் போதும்! விசாலம் அவரைத் தன் விசாலக் கண்களினுல் உருட்டிப் பார்த்து ஆட்டிப்படைத்து விடுவாள். முன்கோபம் அதிகம் உள்ளவள் விசாலம். பிள்ளையில்லாக் குறையைத் தீர்த்துக் கொள்ள கணவனைப் பழிவாங்கி விடுவாள். பொறுக்கலாற்றுத கமலக் கண்ணன் ஆண்டவனை வேண்டினூர். அம்மையப்பா! எங்களுக்கு ஒரு குழந்தைப் பேற்றை அருள்வீராஞல் மனைவியின் துன்பத்தினின்றும் விடுபடுவேனல்லவா என்று நெஞ்சுருகினுர்,

கமலக்கண்ணனின் உருக்கமான வேண்டுகோள் இறைவன் திருச்செவிக்கு எட்டியது, ஒருநாள் கீரிப்பிள்ளை ஒன்று விசாலத்திடம் அன்பாக நெருங்கி வந்தது. கீரியும் பிள்ளைதானே என நினைந்த விசாலம் பால் வார்த்தாள். கீரி குடித்துவிட்டுச் சென்றது. நாள்தோறும் வரத் தொடங்கியது. விசாலத்திற்குக் கீரியின் பால் பாசம் ஏற்பட்டது, வீட்டிலேயே வைத்து வளர்த்தாள். இராமன் என்ற பெயர் சூட்டி அன்பு மிகப் பாராட்டினுள். இப்போது கமலக்கண்ணனுக்குச் சற்று ஓய்வு கிடைத்தது, காரணம் விசாலத்தின் நினைவெல்லாம் கீரியின்பாற் திரும்பிவிட்டது.

ஒருநாள் கீரி செடியருகே மறைந்திருந்த பாம்பைக் கண்டு ஓடி அதனேடு சண்டையிட்டுக் கடித்து குதறியது. கீரியின் செயலைக் கண்டு மகிழ்ந்தாள் விசாலம். பாம்பு இறந்து கிடந்த இடத்தில் 'பளிச் பளிச்' என ஒளிவீசியது. மண்ணை அகற்றினுள். மூவாயிரம் பொற் காசுகள் கொண்ட புதையலைக் கண்டெடுத்தாள். மகிழ்ச்சியின் எல்லைக்குச் சென்ருள், கீரியை எடுத்து முத்த மழை பொழிந்தாள். அன்புச் செல்வமே! உன்னுலன்றே எனக்கு இப்பெரும் புதையல் கிடைத்தது? என தடவித் தடவிக் கொடுத்தாள். முன்னிலும் அதிக அன்பு செலுத்தினுள. கமலக்கண்ணனுக்கு இப்பொழுது பிரச்சினைகள் ஏதும் இல்லை; நிம்மதியாக இருந்தான.

நாளடைவில் விசாலம் கர்ப்பிணி ஆனுள். ஆண் குழந்தை பிறக்க வேணடும் என இருவருமாக வேண்டினர், வேண்டியவாறே ஆண் மகவை ஈன்றெடுத்தாள் விசாலம். கீரியாகிய இராமன் வந்தபிறகல்லவோ நமக்கு நன்மைகள் பல உண்டாயின? என்று குழந்தைக்கு லட்சுமணன என்ற பெயர் சூட்டினுள். தொட்டிலில் வைத்துக் குழந்தையைத் தாலாட்டினுள்.

தாயாகிய இறைவனும் சீவர்களை உலகமாகிய விளையாட்டுத் திடலில் விளையாடவிட்டு, அறநெறி தவறியபோது காலனை அனுப்பித்

தண்டித்துத், துன்பத்தையும் அகற்றி, இரவு பகலற்ற பேரின்பமெனும் வீட்டினில் தூங்கவைத்துத் தாலாட்டுகின்ருன் என்று அடிகளார் "காரிட்ட ஆணவக் கருவறையில்" என்ற பாடலில் கூறுகின்ருர். நான்கு வேதங்களாகிய சங்கிலியில் வெட்டவெளி எனும் தொட்டில் கட்டி சீவாத்மாவாகிய குழந்தையைப் பரமன் தாலாட்டுகிருன். சீவர்கள் தாலாட்டுவதும் ஒன்றுண்டு. தாரகமந்திரம் எனப்படும் குரு மொழியைச் சாதகன் தாலாட்ட வேண்டும்.

விசாலம் தன் குழந்தையாகிய லட்சுமணனைத் தொட்டியிலிட்டுத் தாலாட்டிக் கீரியாகிய ராமனைக் காவலிருக்குமாறு கூறினுள். இராமா நீ வந்த பிறகல்லவோ என் வீட்டில் லட்சுமி தாண்டவமாடுகிருள்? பிள்ளையில்லாக் குறையையும் தீர்த்து வைத்தாய், நீதான் எனக்கு மூத்த மகன் என்று அன்பு மிகப் பாராட்டினுள். ஒருநாள் வழக்கம் போலக் குடமெடுத்துக் குளக்கரைக்குச் செல்லும்போது, இராமா! தம்பி தூங்குகிருன் பத்திரமாகப் பார்த்துக்கொள். நான் தண்ணீர் கொண்டு வருகிறேன் என்று கூறிவிட்டுச் சென்ருள். சற்று நேரத்திற் கெல்லாம் பாம்பு ஒன்று தொட்டிலுக்கு நேராக வேகமாக ஊர்ந்து வரு வதைக் கண்ட கீரி, பாய்ந்து பாம்பைத் துண்டு துண்டாகக் கடித்துப் போட்டது. வாயெல்லாம் இரத்தம் வழிந்தது. அப்படியே வேகமாக தாயிடம் தெரிவிக்கச் சென்றது. குடத்தில் நீர் எடுத்துத் தலைமீது சுமந்து வந்துகொண்டிருந்த விசாலம் வாயில் இரத்தம் சொட்டச் சொட்ட ஓடிவரும் கீரியைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தாள்! குழந் தைக்குக் காவலாக இருக்கவைத்து வந்தோம். குழந்தையைக் கடித் துப்போட்டு வந்துவிட்டதே என நினைந்து ஆத்திரம் மேலிட்டு குடத்தை அப்படியே கீரிமீது போட்டு ஒழிந்துபோ! என்று அலறிக் கொண்டே வீடுவந்தாள், ஐயோ மகனே அருமையாகப் பெற்றேனடா! பாழும் கீரி உன்னைக் கொன்று போட்டதே! என தொட்டிலுக்கருகில் வந்து பார்த்தாள்; குழந்தை மழலைச் சிரிப்பு சிரித்தான். விசாலம் அதிர்ச்சிக்குள்ளானுள். குழந்தையை வாரி அணைத்துக்கொண்டு சுற்று முற்றும் பார்த்தாள், பாம்பு துண்டு துண்டாகக் கிடந்தது, நிலை மையைப் புரிந்துகொண்ட அவள் ஐயோ ஆத்திரத்தில் அறிவிழந் தேனே! என் வாழ்வில் ஒளி கொடுத்த இராமன் கீரியைக் கொன் றேனே! என அழுது புலம்பினுள். என்ன பயன்? ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் மீள்வரோ? எல்லாம் நீயே நீயே என்று அன்போடு வளர்த்த கீரியை பிள்ளைப் பாசம் அறிவை மயக்கி கொன்றுவிட்டதே!

சான்ருேர் எனப்படுவோர் அனைத்தும் நீயே என இறைவனைப் பற்றிக்கொண்ட பின்னர், "இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகமாளும் அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகரு ளானே" என்று பெரியாழ்வார் கூறியவாறு வேறுமொரு பொருளை நாடார்! அடிகளாரும்,

"கொழுந்து திகழ்வெண் பிறை'! என்று தொடங்கும் பாடலில், "தொழுந் தெய்வமுநீ குருவும்நீ துணை நீ தந்தை தாயும்நீ அழுந்தும் பவம்நீ நன்மையுநீ ஆவி யாக்கை நீதானே" என அனைத்தும் நின் னைத் தவிர வேறில்லை என அறுதியிட்டுக் கூறுகின்ருர். ஆவி யாக்கை நீதானே என்ற அடிகளாரின் கூற்றுக்கு "உள்ளுறையில் என் ஆவி நைவேத்தியம், ஓங்குமதி பிராணன் தூபதீபம் ஒருகாலமன்று! இது சதாகால பூஜையாய் ஒப்புவித்தேன் கருணைகூர்!" என்ற அவருடைய பாடலே சான்ருக நிற்கிறது.

இந்நிலைக்குத் தெளிவு தந்தவர் ஆசாரியனே யாகையால் அவரையும் 'தேசிக வடிவுநீ' என்று இப்பாடலில் கூறியுள்ளார். ''குருவாய் வருவாய் அருள்வாய் குகனே'' என்ற அருணகிரியாரின் திருவாக்கும் மற்றுள்ளோரும் கூறியவை சிந்திக்கற்பாலது. இவ்வண்ணம் குரு மொழியால் தெளிவு பெற்ற அடிகளார், படைப்புக் கர்த்தாவாகிய பிரம்மாவிடம் வினு தொடுத்து விடை காண்கின்ருர் வரும் பாடலில்

வேதாவை இங்ஙனம் விதித்ததே தென்னின் உன்
விணைப்பகுதி என்பன் அந்த
விணைபேச அறியாது நிற்க இவை மனதால்
விளைந்ததால் மனதை நாடில்
போதமே நிற்கும் அப் போதத்தை நாடிலோ
போதமேநின் ருல்விளக்கம்
பொய்யன்று தெய்வமறை யாவுமே நீஎன்று
போக்குவர வறநிகழ்த்தும்
ஆதாரம் ஆதேயம் முழுதும்நீ அதலால்
அகிலமீ தென்னையாட்டி
ஆடல்கண் டவனும்நீ ஆடுகின் றவனும்நீ
அருளும்நீ மௌனஞான
தாதாவும் நீபெற்ற தாய்தந்தை தாமும்நீ
தமரும்நீ யாவும்நீ காண்
சர்வபரி பூரண அகண்டதத் துவமான
சச்சிதானந்த சிவமே!

எனவே சுவாமிகள் முதலும் முடிவும் அளத்தற்கு அருமையான இறைவனை ''அந்தம் ஆதியும் அளப்பருஞ் சோதியே ஆதியே அடியார்தம் சிந்தை மேவிய தாயுமானவன் எனும் சிரிகிரிப் பெருமானே'' என விளித்துத் தந்தை, தாய், துணை, தேசிகர், அனைத்தும் நீயே! நின்னையன்றி வேறு துணை கண்டிலேன் என இப்பாடலில் தெளிந்து கூறியிருக்கின்ருர்.

செங்கையில் சுவாமிகள்

யோகாசன ஆலய நிறுவனரும் தலைவருமாகிய உயர்திரு சுவாமி அவர்கள் செங்கல்பட்டு கிளைக்கு வருகை தந்தார்கள். காலை 10 மணிக்கு சின்னமணியக்காரத் தெருவில் நடைபெற்ற ஸ்ரீ முருகானந்தர் குரு பூஜை விழாவில் வேள்விச் சடங்கு நிகழ்த்தி வைத்து, மாலை 3 மணிக்கு இந்து தர்மம் பெருமைபற்றி விரிவுரை ஆற்றினர் 4-2-79 காலை 7 மணிக்குச் சின்னநத்தம் அருள்மிகு சுந்தரவிநாயகர் கோவிலில் ''வேதாந்தமும்'' சித்தாந்தமும் எனும் பொருள்பற்றி சிறப்புரை நிகழ்த்தினர்கள். செங்கை புனித சூசையப்பர் மேல் நிலைப் பள்ளித் தமிழாசிரியர் (ஓய்வு பெற்றவர்) உயர்திரு தியாகராஜன் அவர்கள் தலைமை வகித்தனர் உயர்திரு S. கஜமணி B. Sc, B.T. அவர்கள் வரவேற்றனர் செங்கைப் பிரிவு செயலர் திரு. மு. தங்கவேலு நன்றி நவின்றனர். பிரார்த்தனையுடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது. யோகாசன ஆலய மகளிர் பிரிவு செயலர்கள் R. சாந்தி, B. Sc,, (சென்னை) திருமதி K. மகமாயி அம்மையார் (விருதுநகர்) ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பக்திப்பாடல் இசை விருந்தளித்தனர்.

WINGS OF DIVINE WISDOM

by YOGI SIVALINGAM—U. S. A.

The time will come for clear openings,
Until then, practice very patiently and leave it to the Lord,
Faith within and find within,
Be devoted within and find within,
Meditate within and find the Trikuda,
Don't cry for Enlightenments,,
Be giant for Upliftings,
Sadhana is a great medicine for Self-understandings,
Repeating more the Lord's mantra will be opener of the
Heart,
Good food is the Lord's Mantra,
Good companionship is the Good-thoughts,
Good friendship is the Spiritual practices,
Good time is the Control-the sensitives,
Good vision is the Open heart with knowing the inner-self,
Don't worry, work and fast according to your
Inner strength and Inner-peace. *

Work is worship,
Work is God's work,
Work is wealthy and healthy,
Work is wonderful to control the mind,
Work is a great yoga,
Work is a Great Contemplation-Concentration,
Work and repeating Mantra are the same,
Work and Concentration are one,
Work and happiness are one,
Work and health are one,
Work and good memory are one,
Work and controlling the mind are one,
Work will lead us to God's Kingdom.
Work will lead us traveling the Astral World.
I always welcome any work and enjoy in it.
I always welcome the God's work and energy in it.
I always welcome the work and responsibility
for the mind *

பதார்த்த குண போதினி

மூலிகை குணனுபவத்தை விளக்கும் சிறந்த நூல்

வைத்திய ரத்தினம் வி. பலராமய்யா, பி.ஏ., பி.எல்.

(மாவட்ட நீதிபதி, ஓய்வு)

செடி வகை

ஆவாரை: இதனுடைய பட்டை கஷாயம் சாப்பிட சருமத்திற்கு ஒளிதரும். நீரிழிவ தீரும். இதன் பூவை கூட்டு செய்து சாப்பிட மூத்திர சம்பந்தமான நோய்கள் குணமாகும். வெள்ளை வெட்டை தீரும்.

பொன்னுவாரை: இதுவே சூரத் நிலாவரை. மலத்தை இளக்கும். இதன் பூ சரும நோய்கள், தடிப்பு. மேலும் படைகள் வெடிப்பு, தினவு முதலியன நீங்கும்.

பேய்மிரட்டி (வெதுப்படக்கி): கோர சுரங்களைப் போக்கும்.

குன்மகுடோரி: இதன் சமூல சூர்ணம் குன்மத்தைப் போக்கும்; கஷாயம் செய்து சாப்பிட இருமல், சுவாசகாசத்தை நீக்கும்.

விடத்தேர் (விடதாரி): இதனுடைய பட்டைத் தூள், சுத்தி செய்த பாதரசம் இரண்டும் சேர்த்து தேன்விட்டு நன்றாக மடியும் அளவுக்கு மத்தித்து மெழுகாக செய்துகொண்டு பிரதி தினமும் காலையில் மிளகளவு ஒரு மண்டலம் சாப்பிட்டுப் பசும் பாலன்னம் சாப்பிட உடல் வச்சிரமாகும்.

நின்றால் சுணங்கி: பெரும்பாடு என்னும் பெண்கள் உதிரப் பெருக்குக்கு இதன் இலைகள் ஒரு கைப்பிடி, ஒரு வெங்காயம், கொஞ்சம் சீரகம் வைத்தரைத்து எருமை தயிரில் காலை மாலை ஒரு வாரம் அல்லது பத்து நாட்கள் கொடுக்க குணமாகும். ஸ்திரீ புருஷ வசியத்துக்குதவும்.

கோடகசாலை: இதன் இலைகளை மிளகுடன் சேர்த்தரைத்து கெச்சக்காயளவு கொடுக்க பாம்பு கடிவிஷம், காணுக்கடி விஷங்கள் குணமாகும். பத்தியம்: உப்பு சாப்பிடக்கூடாது.

இதன் சாருடன் சம அளவு விளக்கெண்ணெய் கலந்து சுட வைத்துத் தைலமாக காலை மாலை தேக்கரண்டியளவு சாப்பிட சொறி, சிரங்கு, மேகப் படைகள், இரணம் குணமாகும்.

சூரியகாந்தி: வாத ரோகங்களை நீக்கும்.

ஈசுரமூலி: பலவிதமான விஷங்களை முறிக்கும். மேக நோய்களைப் போக்கும். மாட்டு நோய்களுக்கு இதன் கொடியை கழுத்தில் சுற்றி வைத்தால் நல்ல பயனைத் தரும். பாதரசம் லிங்கம் முதலியவைகளைக் கட்டும்.

சங்கங்குப்பி: மேக ரோகங்களுக்கு ராஜா. மேக தைலத்தில் முக்கியமாக சேர்க்கத் தகுந்தது. இதனுடைய இலைகளை மிளகு சேர்த்து கஷாயம் செய்து சாப்பிட ஆஸ்துமா என்னும் மந்தார காசம், சுவாச காசம் குணமாகும். வறட்டிருமலும் குணமாகும்.

YOGASANAS

Translated version of Mr. E. S. Rangaswami's
A great exponent of Yagasanas
By Sri R. Meharbabu, B.Sc., M.A., B.T.,

(Continued from previous issue)

SARVANGASANA

Sarvangasana - All pose. It is the important asana of all. It can be understood out of experience and regular practise. This significant name has the special feature for the benefit of all organs of our body. Hence the name Sarvangasana - all pose. In appearance it is very easy to be practised. But for beginners it cannot be done easily.

Lye down on a carpet facing the sky by stretching the limbs in stiff position. The hands are stretched closely to lateral sides of body and keep the palms seated on ground. Then raise the legs without bending, slowly and gradually together, till you get 'L' shape. Now raise the legs and pelvic gridle by controlling the breath and with the help of your palm and with the full support of elbows seated on ground. At the same time head and neck region should not be disturbed. You get the triangular shape of hands when palms hold back. In this position entire body except head and neck brought upside down. It is an easy exercise to those who are slim. But those who are fat with flat belly will feel very difficult and could not hold their back with their palms. Such persons with the help of others can try to do this exercise, slowly for a few minutes daily.

In this position we should know what are the changes that take place in our body. We see water pipes fitted in houses. In certain houses water is lifted to first or second floor, as the case may be. To lift water, we use pump either by hand power or electricity. In the same manner in our body, blood bank-heart is situated slightly towards left in between the lungs of the chest cavity. Just like pump that lifts water to different floors of a house heart is pumping blood to the anterior organs like, neck, brain, eyes, ears, mouth and so on. To lift water from the lower level is a different matter. It is poasible with the help of a pump. But the same water, when allowed to drain from high level it is very easy. We need no pump. In fact the flow of force, will be greater. Supposing a beaker of water is holded in the inverted position, water will flow down quickly. In the similar manner by doing sarvangasana the entire body except neck and head becomes upside down. The heart in the chest cavity also upside down and slightly in the higher position. Due to this, when blood is pumped out by heart, more and more blood could flow to neck and head with greater force easily. But in reality it restricts the free flow due to the bent neck and the strained muscles of the

anterior chest cavity. So blood is suppressed to flow beyond neck. On account of this, the circulation is rich in pharynx, glotis, epiglotis, thyroid and para thyroid. This is infered by the doer, Let us discuss the functions of thyroid gland.

About 2" above throat cavity is situated adam's apple. We can touch and feel the portion. This is placed on either side of the trache a below the larynx. Thyroid gland has five petals like Manoranjitham flower. Although it has five lobes it has a common passage only. It is an endoctrine gland. There are many such endocrine glands in our body. They secrete a kind of juice known as hormones. Since these glands have no ducts they are also called ductless glands. The hormones secreted by them get mixed with blood directly. Thyroid gland secretes an hormone called thyroxin. Almost all organs of our body is under the control of thyroid gland.

As long as thyroid gland secretes its hormone properly, all the organs of our body function properly. If the gland does not function, due to decrease in its secretion all the sense organs become weary and could not function normally. Due to this. causes tiresome limbs, digestive disorder etc., etc. Allopathy doctors diagnose patients of such symptoms as anaemic. But patients of such ailments will lead to the attack of tuberculosis, rheumatism, paralysis, heart diseases and so on.

Such patients are advised to take thyroid or thyroxin mixture. It may cure the disease and give temporary relief. Some times they cannot cure it.

In the City of Berlin in Germany an eminent Surgeon invented a surgical method to cure the same. Accordingly he removed the thyroid of a patient and it was substituted with a good thyroid gland removed from the body of a sturdy ape. This method is known as transplanting an organ in surgery. After some time the patient become hale and healthy. After this a multimillionaire of Berlin who was seventy six years old, underwent the same surgical treatment. It is said that the old man restored all his teenage spirit and vigour. He got married a lady of twenty years old. The matter was published in 'Graphic'—a monthly magazine along with the photo of the couple.

What conclusion should we get with this? Man should know that due to the strong power of thyroid gland alone, life could be happy and gay.

The power of thyroid should have been known to our sages of ancient times. That is why they have practised the Yogasanas which is a part of the eight folded subject matter Yoga sastra. People of this world wondered about the upkeep of happy and sound physical health of sages and their longevity and magnificent powers.

We have read that Sarvangasana is the best of all asanas. The procedure to do this asana has been explained. After having done this asana Matsaya Asana (Fish Pose) should be followed,

TOBACCO LICKS THE LIPS BUT BITES THE LUNGS

KALPA

1. Some years ago we had horse and buggy transportation unpaved streets, and roads, gas street lights, kerosene lamps indoors. No atomobiles seen on streets. Radio and TV unheard of. No man had ever flown. After all, man's needs are few, though his wants may be many. Man should remember that there is enough on this earth for everyone's needs, but not enough for everyone's greed. By abstraining from disturbing Nature, man can help for the existence of life on earth. It is like the principle of LIVE and LET LIVE. But unfortunately man does disturb Nature's wealth in the name of civilization. Today science and technology climaxes its progress in an enormous new industries. Today it is turning out rockets and space-crafts. soon to take man to the moon and beyond. Man doubts about his destination in the Space-age. Though man is so much advanced in the space-age, yet he actually feels that he is not living in good health and heart as his ancestors.

WHY?


The answer one gets is POLLUTION.

What do you meen by POLLUTION and how it affects the health and heart of a man?

2. Pollution means an act of defilement or to make impure directly or indirectly. In the advancement of technology and science, factories sprong up. Along with them pollution also started. Pollution in all things. Pollution in air, water and noise and what not. One will find pollution mostly in metropolition life than in the urban. Pollution control was neglected and people were not aware of the damage to health and heart. Little attention is paid to the pollution of air, water and noise. It is saddening that the selfish and avaricious man has raped the earth, destroyed vegetation and killed wildlife to extinction in several parts of the world. Man has forgotten that he is part of Nature, but the way in which he behaves shows as if he is separated from Nature. By that man looses good things of life in the world. Man is polluting the environment he has. By his intellect he is fouling his own den. He has made it so bad everywhere that he has no place to go. The price of the pollution could be the death of man is to be proved by his own acitons. Let us see the action of the man. Let first be the AIR - VAYU,

—Continued.

திருமணம்



மணமகன் திருநிறைச் செல்வன் : **S. சுரேஷ்குமார் D.A.E.**

மணமகள் திருநிறைச் செல்வி : **D. எழிலரசி**

யோகாசன ஆலயத்தோடு நெருங்கிய தொடர்புகொண்டு அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாகவும் ஆயுள் அங்கத்தினராகவும் திகழ்ந்து வரும் தம்பதிகள் திருவாளர் P. செல்வராஜன், திருமதி சாவித்திரி அவர்கள். இவர்களின் அன்புச் செல்வனும் யோ. ஆ. ஆயுள் அங்கத்தினருமான S. சுரேஷ்குமார், D A.E. அவர்களுக்கும், சென்னை D,J S. Steel Re-Rolling Mills, Partner, உயர்திருவாளர் P. தர்மராஜன் அவர்களின் அன்புச்செல்வி எழிலரசிக்கும், சென்னை திருவொற்றியூர் நெடுஞ்சாலை 660, மணமகள் இல்லத்தில் 1—2—79 வியாழன் காலை 9 மணியளவில் திருமணம் வெகு சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

திருவாளர் அரு. சங்கர், B.Sc., அவர்கள் அனைவரையும் வரவேற்றார். உயர்திரு தண்டாயுதபாணி, M.P. அவர்கள் மண விழாவுக்குத் தலைமை வகித்து வாழ்த்துரை வழங்கினார்கள். யோகாசன ஆலயத் தலைவர் உயர்திரு கோ. மு. சுவாமி அவர்கள் திருமணத்தை நிகழ்த்தி வைத்து வாழ்த்தி யருளினார்கள். அமைப்பாளர் திரு. பி. வெங்கடேசன் வாழ்த்துரை வழங்கினார்கள், திரளாகக் கூடியிருந்த சுற்றத்தினர், நண்பர்கள் யாவரும் மணமக்கள் பதினாறு பேறுகளுடன் பெரு வாழ்வு வாழ வாழ்த்தினர்,

மங்கல மேளங்கள் முழங்க உலாவந்த மணமகன் மணவிழா முடிந்ததும் மணமகளோடு தம்பதியராய் திருவொற்றியூர் நெடுஞ்சாலை 242 எண்ணுள்ள தம் இல்லத்திற்கு ஊர்வலமாக அழைத்துவரப் பட்டனர். உலா காட்சி திரைப்படமெடுக்கப்பட்டது. அனைவரும் விருந்துண்டு மகிழ்ந்த பின்னர், மாலை 6-30 மணி யளவில் மணவிழா அரங்கில் மணமக்கள் காட்சிதந்து அனைவரையும் வரவேற்றனர். மெல்லிசைக் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றுக்கொண்டிருந்தது. சுற்றத்தினரும், நண்பர்களும் அன்புப் பரிசுகளை வழங்கியும் மகிழ்ச்சியைத் தெரிவித்த வண்ணமுமாக இருந்தனர். யோகாசன ஆலய அன்பர்கள் பலரும் வருகைதந்து தம் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டதோடு வாழ்த்து மடலும் வழங்கினர்கள்.

மணமகன், தந்தையார் நிர்வகித்துவரும் சுரேஷ்குமார் லாரி டிரான்ஸ்போர்ட் (Suresh Kumar Lorry Transport) டிலும், மீனு இன்ஜினியரிங் ஒர்க்ஸ் (Meena Engineering Works) ஸிலும் பங்குதாரராக வகித்துவரும் திறன் மிகுந்தவர்.

இத் தம்பதிகள் நீண்ட நெடுங்காலம் ஒளிமிகு வாழ்க்கை வாழ்ந்து சுற்றமும் நட்பும் பேணி அனைத்து நலன்களும் பெற்று வாழ்வாங்கு வாழ்வார்களாக!

மண மக்களின் மணநாள் நினைவாக

இம் மாத இதழ் வெளியிடப்பட்டது.

ஆத்மயோகம்—23

சென்னை வேப்பேரி மேடக்ஸ் தெரு, திருஞானசம்பந்தர் திருமண மண்டபத்தில் 26—1—79 காலை 10 முதல் மாலை 4-30 மணி வரை ஆத்மயோக நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பொதுச் செயலர் திரு. C. இராமசுவாமி அவர்கள் தலைமை வகித்தனர். பிரார்த்தனையுடன் வேத வேள்வி வளர்க்கப்பட்டது, யோகாசன ஆலய அன்பர்கள் யோகாசனங்கள் செய்து காண்பித்தனர். நன்மைகளைத் திரு. E. வேதாசலம் அவர்கள் விளக்கந் தந்தனர். மகளிர் குழுவினரின் அருளிசைக்குப் பிறகு தியானம் கடைபிடிக்கப்பட்டது. மதியம் இடைவேளை முடிந்ததும் யோ. ஆலய குழுவினர் இசை பாடிய பின் தியானமும், திருவாளர் V. A. கெங்குராஜ் (தியான வகுப்புச் செயலர்) அவர்களின் சிறப்புரையும் நிகழ்ந்தது. யோகாசன ஆலய தலைவர் உயர்திரு கோ. மு. சுவாமி அவர்கள் மனோ தத்துவம், உடல் தத்துவம் கடவுள் தத்துவங்களை விளக்கி உரையாற்றினர்கள். புரசைக் கிளைச் செயலர் திரு. M. லோகநாதன் நன்றி நவில பிரார்த்தனையுடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

விருதுநகரில் 39-ஆம் ஆண்டு விழா

யோகாசன ஆலயம் தொடங்கி முப்பத்தொன்பதாம் ஆண்டு விழாவினை விருதுநகர்க் கிளை அன்பர்கள் வெகு சிறப்பாகக் கொண்டாடினுர்கள். 28—1—79 ஞாயிறன்று இரவு 7-30 மணிக்கு விருதை ஸ்ரீ வாலசுப்ரமணிய சுவாமி கோவிலில் நிகழ்ந்த இச் சீர்மிகு விழாவுக்கு உயர்திரு அர்பாள் ராமசாமி அவர்கள் தலைமை வகித்தும் யோகாசனங்கள் செய்வதன் நன்மைகளை விளக்கியும் பேருரை யாற்றினுர்கள். சுருக்கம் வருமாறு :—

"யோகாசன ஆலயத் தலைவர் உயர்திரு கோ. மு. சுவாமி அவர்களோடு பத்தாண்டுகளாகத் தொடர்பு கொண்டுள்ள பேறு பெற்றேன். அப் பெரியாரின் சாந்த முகமும் இனிய சுபாவமும் என்னைக் கவர்ந்தன என்னையீன்ற அன்னையார், தாயுமானவரின் அருட்பாடல்களை பக்தியோடு படிப்பார்கள். அத் தவப்பயனுல்யான் செல்வ நிலையில் வாழ்வதோடு என் மக்களாகிய இருவரும் என் தாயாரின் வாரிசாக யோகாசன ஆலயத்தில் அணுக்கமாகச் சார்ந்திருக்கின்றனர். நாற்பது ஆண்டுகளாக யோகாசனங்களை முறையாகச்செய்து வருகின்றேன். மானிட சரீரம் பெற்ற நாம் பொருட் செல்வத்தைப்போலவே, உடல் பிணியற்றுவாழ குறைவற்ற செல்வமாம் இப்பயிற்சிகளைப் பெறவேண்டும். இதனுேடு மனப்பிணியை அகற்றும் நெறியையும் இணைத்து யோகாசன ஆலயம், இல்லறம் துறவறம் இரண்டனையும் போற்றும் தாயுமானவர் பாடல்களை ஆதாரமாகக்கொண்டு அன்பர் பணிபுரிவது போற்றத் தக்கதாகும்.

பெரு மதிப்பிற்குரிய சுவாமி அவர்கள் இப் பாடல்களுக்குத் தரும் விளக்க உரைகளைத் தாங்கி மாதந்தோறும் வெளிவரும் "யோகாசன ஆலய விஜயம்" பத்திரிகை அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டிய ஒன்ருகும். கற்பது கேட்பதுடன் நில்லாமல் செயல் முறையில் அனுபவப்பயிற்சி அளித்துவரும் சுவாமி அவர்களின் அருட்தொண்டை நாம் அனைவரும் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்றனர்.

செல்வங்கள் S. கார்த்தீஸ்வரி, ஜெயந்தி, P. ஆனந்தராணி, S. அமிர்தகௌரி, S. பிரியா, A, தியாகராஜன், A. சிவசங்கரன், M. சண்முகவேல் ஆகியோர் யோகாசனங்கள் செய்து காண்பித்தனர். விழாத் தலைவர் அவர்கள் விளக்கமாகவும் தெளிவாகவும் யோகாசனங்களைப்பற்றி உரையாற்றினுர்.

அடுத்து, விருதுநகர் V. V. வன்னியப்பெருமாள் கல்லூரித் தமிழ்த் துணைப் பேராசிரியை திருமதி வசந்தா சோலைமலை M.A., அவர்கள் "கல்லும் கனியும்" என்ற பொருள்பற்றி விளக்கவுரை நிகழ்த்தினுர்கள். விருதை செயலர் திரு. M. P. A. S. நடராஜன் அவர்களின் வரவேற்புரையுடன் தொடங்கிய விழா, மகளிர் பிரிவு செயலர் திருமதி K. மகமாயி அம்மையாரின் நன்றியுரையுடன் இனிது நிறைவேறியது தொடக்கத்திலும் இறுதியிலும் பிரார்த்தனை நிகழ்ந்தது.

திருமணம்

யோகாசன ஆலய சென்னை மகளிர் இசைப் பிரிவு துணைச் செயலர் திருமதி P. K. ஞானம், காசிராஜன் அவர்களின் மைந்தனும் யோகாசன ஆலய அங்கத்தினருமான திருவளர் செல்வன் ஜெயகுமாருக்கும் திருவளர் செல்வி பைங்கிளிக்கும் 7—2—79 அன்று சென்னை G. A, ரோடு, 98, மணமகள் இல்லத்தில் திருமணம் நடைபெற்றது. திருவாளர் அரு. சங்கர் B.Sc., அவர்கள் தலைமையில் யோகாசன ஆலயத் தலைவர் உயர்திரு கோ. மு. சுவாமி அவர்கள் மண விழாவை நடத்திவைத்து வாழ்த்தியருளினார்கள். திரு. பி. வெங்கடேசன் (யோ. ஆ. அமைப்பாளர்) வாழ்த்துரை வழங்கினார்கள். யோ. ஆ. அன்பர்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

யோகாசன ஆலய அன்பர் திருவளர் செல்வன் S. பெரியசாமி, ஏழாயிரம் பண்ணையைச் சார்ந்த திருவளர் செல்வி மாரியம்மாளை இல்வாழ்க்கைத் துணைவியாக ஏற்ற திருமண நிகழ்ச்சி சென்னை சந்திரப்ப முதலி தெரு திருமண மண்டபத்தில் 7—2—79 அன்று நடைபெற்றது. சென்னைவாழ் பந்துவார்பட்டி நாடார் அபிவிருத்தி தர்ம பண்டின் தலைவர் திரு. S S. துரைசாமி நாடார் தலைமையில், சென்னை நாடார் முன்னேற்ற இளைஞர் கழக துணைத் தலைவர் திரு. V. அப்பாதுரை அவர்கள் திருமணத்தை நடாத்திவைத்தார். "யோகாசன ஆலய விஜயம்" ஆசிரியர் புலவர் திரு. பா, ஆழ்வார், 'சென்னை பந்துவார்பட்டி நாடார் மகமை' துணைச் செயலர் திரு. T. ஜோதியப்பன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

11—2—79 அன்று சென்னை பிருட்வே கன்னையா கண்ணம்மா திருமண மண்டபத்தில், யோகாசன ஆலய உறுப்பினர் திருவளர் செல்வன் S. இராஜா B.A, அவர்களின் திருமணம் நடைபெற்றது. மணமகள் செல்வி அமலாபாய் B.A., இராஜா அவர்களுக்குத் துணைவியாக வாய்க்கும் பேறுபெற்றார். யோகாசன ஆலயத் தலைவர் உயர்திரு கோ. மு. சுவாமி அவர்களும் மற்றும் அன்பர்களும் கலந்துகொண்டு வாழ்த்தி, வாழ்த்து மடல் அளித்தனர்.

Regd. No. M. 5264 Yogasana Alaya Vijayam

ஓதும் எழுத்தோ டுயிர்க்கலை மூவைந்தும்
ஆதி எழுத்தவை ஐம்பதோ டொன்றென்பர்
சோதி எழுத்தின் நிலையிரு மூன்றுள
நாத எழுத்திட்டு நாடிக்கொள் ளீரே

மந்திரங்கட்கெல்லாம் முதலாக ஓதப்படும் ஓங்காரத்துடன் ஏனை உயிரெழுத்துப் பதினைந்துங்கூட மொத்தம் உயிரெழுத்துப் பதினறு. மெய்யெழுத்து முப்பத்தைந்து. ஆகமொத்தம் எழுத்து ஐம்பத்தொன்று. சோதியாகிய ஒளி எழுத்துச் சிவம். அகத்தே மூல முதல் புருவ நடு ஈருகவுள்ள ஆறு நிலைக்களங்கள் உள்ளன, அவற்றின் பரவெளி எழுத்தாகிய ஓம் என ஒலித்துக் கண்டு கொள்க!

—திருமந்திரம்.

சந்தாதாரர்க்கு அறிவிப்பு!

'யோகாசன ஆலய விஜயம்' ஆங்கில மாதந்தோறும் 25 ஆம்நாள் அஞ்சலகத்தில் சேர்க்கப்படுகிறது. 30 ஆம் தேதிக்குள் தங்களுக்குக் கிடைக்கவில்லையெனில் தெரிவிக்கவும்.

இவ்வாண்டின் சந்தா செலுத்தாதவர்கள் ரூ. 5 M. O. அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஆண்டு சந்தா ரூ. 5 ஆயுள் சந்தா ரூ. 50

அனுப்ப வேண்டிய முகவரி :

அருண்குமார் N. பட்டேல்,
செயலாளர் & வெளியிடுபவர்,
" யோகாசன ஆலய விஜயம் "
462, T. H. ரோடு, சென்னை-600 021,

Published by Sri Arun Kumar N. Patel, 462, T. H. Road, Old Washermenpet, Madras-600021. Editor Pulavar Sri B. Alwar, 464, T. H. Road, Old Washermenpet, Madras-600021. Printed by Sri C. M. Sivaraman, at T. G. Sambandam & Co., Counian Press, 169, (41) Broadway, Madras-600 001.

February-1979